**O.S. 75 /2015**

**Deposition of Pw3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சதாசிவம் | Father/Husband's Name | : | ராமன் |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | 51 |

**Solemnly affirmed/sworn by Tmt.D.Devi, Assistant, Dated:06.09.2022 in accordance with the provision Section.6 of oaths act of 1969.**

நான் தற்போது கடத்தூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சிய சம்மன் வந்ததன் பேரில் இன்று அசல் மற்றும் சான்று நகலுடன் ஆஜராகியுள்ளேன். புல எண்.21/5 51 1/2 ஏர்ஸ் சந்தை புறம்போக்கு நிலம். புறம்போக்கில் எத்தனை வகை என்றால் கல்லாங்குத்து புறம்போக்கு, கரடு புறம்போக்கு, புஞ்சை புறம்போக்கு ஆகும். இதில் எது எதற்கு பட்டா கொடுக்கமுடியும் என்றால் கல்லாங்குத்து புறம்போக்கு மற்றும் புஞ்சை தரிசுக்கு, போடுகால் புறம்போக்கிற்கு பட்டா கொடுக்கலாம். அதன் தன்மையை மாற்றி கொடுக்கவேண்டும். சர்வே எண்.21/13 என்னவாக உள்ளது என்றால் கிராம நத்தமாக உள்ளது. சர்வே எண்.21/5-க்கும் சர்வே எண்.21/13-க்கும் புல வரைபடம் உள்ளது. சர்வே எண்.21/5-க்கு எந்த திசையில் சர்வே எண்.21/13 உள்ளது என்றால் வடக்கு உள்ளது. சர்வே எண்.21/5-க்கு சம்மந்தப்பட்டது தான் சர்வே எண்.21/13 என்றால் இல்லை. மேற்படி சர்வே எண்ணை பார்த்துள்ளேன். சர்வே எண்.21/13 என்பது வாதியின் வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் இடையில் உள்ள பகுதி என்றால் சரிதான். வாதியின் வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் இடையில் எவ்வளவு அகலம் இருக்கும் என்றால் தோராயமாக தெரியவில்லை. சர்வே எண்.21/13-க்கு பின்னிட்டு மேற்கு பக்கமுள்ள பகுதி என்னவாக உள்ளது என்றால் நான் பார்க்கவில்லை. சம்மன் வந்த பிறகு பார்வையிட்டேனா என்றால் கடையை மட்டும் பார்த்தேன். சர்வே எண்.21/5-க்கு வடக்கு பக்கம் சர்வே எண்.21/13 வடக்கு புறம் ரோடை ஒட்டி கடை உள்ளது என்றால் சரிதான். கடைக்கு பின்னிட்ட பகுதி காலிஇடமாக உள்ளது என்றால் நான் பார்க்கவில்லை.

வாதியின் 21/2 அவருடைய வீடு கடையை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. 2 சர்வே எண்ணிற்குண்டான புலவரைபட உண்மை நகலை எடுத்து வந்துள்ளேனா என்றால் எடுத்துவந்துள்னே். புலவரைபடம் எக்ஸ்-1. அ-பதிவேடு எக்ஸ்-2, நத்தம் சிட்டா எக்ஸ்-3 ஆகும்.

2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

கடத்தூர் நத்தம் சர்வே எண்.21/5 நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு பின்பு எந்த உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.21/5 சந்தை புறம்போக்கு என்ற வகைப்பாட்டில் இருந்தாலும் அது சந்தை இல்லை என்றால் தற்போது இல்லை. சர்வே எண்.21/5-ல் கிழக்கு பக்கம் தருமபுரி கடத்தூர் சாலையும் தெற்கு பக்கம் புதுரெட்டியூர் செல்லும் சாலையும், வடக்கு பக்கம் அரசு பெண்கள் மேல்நிலைபள்ளி செல்லும் தார்சாலையும் உள்ளது என்றால் சரிதர்ன. சர்வே எண்.21/5 கடத்தூர் புதிய பேருந்து நிலையம் கடத்தூர் காவல் நிலையம், சமுதாய கூடம் சீனிவாச பெருமாள் கோவில் ஆகிய பகுதிகள் உள்ளது என்றால் சரிதான். ச.எண்.21/5 எண்ணில் எந்த தனிநபர் ஆக்கிரமிப்பும் இருந்ததாக தெரியவில்லை என்றால் சரிதான். ச.எண்.21/5ல் சந்தைபுறம்போக்கில் ஏதாவது ஆக்கிரமிப்பு இருந்திருந்தால் வருவாய் துறை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். சாட்சிய சம்மனில் கண்ட ச.எண்.21/13 என்பது யாருடைய பெயரில் நத்தம் பட்டாவாக உள்ளது என்றால் அண்ணாமலை மனைவி சுந்தரியம்மாள், சந்திரன் (எ) சுந்தர்ராஜன் த.பெ. அண்ணாமலை ஆகியோர் பெயரில் உள்ளது. இதன் பட்டா எண் என்ன என்றால் 369 என்று உள்ளது. சாட்சிய சம்மனில் கண்ட சர்வே எண்.21/5-ல் இருந்து பிரிந்தது சர்வே எண்.21/13 அல்ல என்றால் சரிதான். நிலஉடைமை மேம்பாட்டு திட்ட காலத்தில் ச.எண்.21/5 உள்ளது போலவே அதே காலத்தில் ச.எண்.21/13 உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 18.2.1980 நத்தம் நில வரி வட்டாட்சியர், அரூர் அவர்களால் கடத்தூர் கிராம நத்தம் சர்வே எண்.21/13-க்கு அண்ணாமலை உடையார் மனைவி சுந்தரியம்மாள் பெயரில் வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

ச.எண்.21/13-க்கு அ-பதிவேடு கொண்டு வந்துள்ளேனா என்றால் என்னுடைய கணக்கில் இல்லை. என்னுடைய கணக்கில் இல்லையென்றால் எதனடிப்படையில் இல்லை என்றால் நான் தற்போது தான் பணியிர் சேர்ந்தேன் அதனால் தெரியவில்லை. வட்டக்கணக்கில் தாக்கல் ஆகி இருக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.